SHANKAR IAS ACADEMY™
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

# தமிழகத் தலைவர்கள் வரிசை

**(TNPSC தேர்வு Unit - 8 மற்றும் Unit - 9 உடன் தொடர்புடையது)**



# இரா. நெடுஞ்செழியன்


SHANKAR IAS ACADEMY
AP-2241, 2nd Floor, 12th Main Road,
Anna Nagar, Chennai - 600 040. Tamil Nadu.
www.shankariasacademy.com
Email : tnpscfeedback@shankarias.in

# தமிழகத் தலைவர்கள் வரிசை

## 9. இரா. நெடுஞ்செழியன்

- இவர் 1920 ஜூலை 11 இல் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள **திருக்கண்ணபுரம்** என்னும் ஊரில் பிறந்தார்.
- இவரின் இயற்பெயர்: **நாராயண சாமி**
    - இவரின் பெற்றோர்: இராசகோபால் – மீனாட்சி அம்மாள்.
- இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் (M.A) பெற்றார்.
- தனது மாணவப் பருவத்திலேயே பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டார்.
- இவர் 1938 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டார்.
- பெரியாரின் நம்பிக்கையை பெற்ற இவர் அவருடைய சுற்றுப் பயணங்களில் உடன் அழைத்து செல்லப்பட்டார்.
- அப்பொழுது பெரியாரைப் போன்று இவருக்கும் தாடி இருந்ததால் இவர் **'இளந்தாடி' நெடுஞ்செழியன்** என அழைக்கப்பட்டார்
- இவர் கீழ்க்கண்ட பன்முகத் தன்மையை கொண்டவர்.
    - எழுத்தாளர்
    - இதழாளர்
    - அரசியல் வல்லுநர்
    - சொற்பொழிவாளர்
- 1944 இல் நீதிக்கட்சியானது திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட **'அண்ணா துரை தீர்மானத்தை'** வழி மொழிந்தவர் நெடுஞ்செழியன் ஆவார்.
    - முன்மொழிந்தவர் – அறிஞர் அண்ணா.

SHANKAR IAS ACADEMY

- நெடுஞ்செழியனின் கல்வியறிவு, மொழிப்பற்று, பேச்சாற்றல், நேர்மை போன்ற குணங்கள் அண்ணாவை கவர்ந்து விட்டன.
- இவரின் தனித்துவமான மேடைப் பேச்சின் காரணமாக **'நாவலர்' நெடுஞ்செழியன்** என்று அழைக்கப்பட்டார்.
- 1949 இல் அண்ணா அவர்களால் திமுக உருவாக்கப்பட்ட பிறகு நெடுஞ்செழியன் அவர்கள் திமுகவின் **துணை பொதுச் செயலாளர்** ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
  - பொதுச் செயலாளர் – அறிஞர் அண்ணா
- திமுகவின் **'ஐம்பெரும் தலைவர்களில்'** இவரும் ஒருவர் ஆவார். ஐம்பெரும் தலைவர்கள்:
  - அறிஞர் அண்ணா
  - ஈ.வெ.கி. சம்பத்
  - இரா. நெடுஞ்செழியன்
  - என்.வி. நடராஜன்
  - மதியழகன்
- அண்ணா அவர்கள் **1953 ஜூலை 14** இல் **மும்முனைப் போராட்டம்** ஆனது நடத்தப்படும் என்று அறிவித்தார். அதற்கு முந்தைய நாள் அக்கட்சியின் ஐம்பெரும் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு **ஐவர் வழக்கு** என்று அழைக்கப்பட்டது.
- 1956 இல் திமுக வின் **பொதுச் செயலாளர்** ஆனார்.
  - முன் மொழிந்தவர் – ஈ.வெ.கி. சம்பத்
  - பொதுச் செயலாளர் பதவி என்பது அக்கட்சியின் மிக உயரிய பதவி ஆகும்.
- இவர் அண்ணா அவர்களால் **கழகக் காவலர்** என்று அழைக்கப்பட்டார்.
- இவர் 1956 ஆம் ஆண்டு **திருச்சிராப்பள்ளியில்** நடைபெற்ற திமுக மாநில மாநாட்டில் அண்ணா அவர்கள் நெடுஞ்செழியனை **"தம்பி வா! தலைமையேற்க வா! ஆணையிடு, கட்டுப்படுகிறோம்"** என்று பொது மேடையில் அழைத்து பெருமைப் படுத்தினார்.

SHANKAR IAS ACADEMY

- திமுகவின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவரான ஈ.வெ.கி. சம்பத் 1961 இல் **‘தமிழ்த் தேசிய கட்சி’** என்ற தனிக் கட்சியை தொடங்கினார்.
    - தமிழ்த் தேசியக் கட்சியின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் விமர்சனம் செய்தும் திமுக வின் இலட்சியத்தை நறுக்குத் தெறித்தாற் போல எளிமையான நடையில் **‘திமுக’** என்ற ஒரு சிறு நூலை நெடுஞ்செழியன் எழுதினார்.
    - பின்னர் கட்சியின் **‘அவைத் தலைவர்’** என்ற பதவி நெடுஞ்செழியனுக்கு அளிக்கப்பட்டது. (1961)
- அண்ணா இவரை **நடமாடும் பல்கலைக்கழகம்** என்று அழைத்தார்.
- 1962 இல் சென்னை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார்.
    - எதிர்க்கட்சித் துணைத் தலைவர் – மு. கருணாநிதி
- 1965 ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள இருந்த நெடுஞ்செழியன் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் கைது செய்யப்பட்டார்.
- 1967 தேர்தலில் திமுக வெற்றி பெற்ற பொழுது **திருச்சியில்** இருந்த **பெரியாரை** சந்தித்து வாழ்த்து பெற நினைத்த அண்ணாவுடன் சென்றவர்கள் **நெடுஞ்செழியன், மு.கருணாநிதி** ஆகிய இருவரும் ஆவர்.
- அண்ணா அவர்கள் 1968 இல் **இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை** நடத்த திட்டமிட்டார்.
    - இதற்காக மாநாட்டு குழு உருவாக்கப்பட்டது.
    - இக்குழுவிற்கு தலைமை ஏற்றவர் – **அண்ணா**
    - மாநாட்டு பணிகளை நிறைவேற்ற இரண்டு நபர்களை அண்ணா தேர்வு செய்து இருந்தார்.
        - நெடுஞ்செழியன்
        - மு. கருணாநிதி
- இவர் கீழ்க்கண்ட முதலமைச்சர்களின் அமைச்சரவையில் பங்கேற்றார்.
    - 1967 – அண்ணாதுரை (கல்வி மற்றும் தொழிற்துறை)

SHANKAR IAS ACADEMY

- 1971 – கருணாநிதி (கல்வி)
- 1980 – எம்.ஜி. இராமச்சந்திரன் (நிதி)
- 1985 – எம்.ஜி. இராமச்சந்திரன் (நிதி)
- 1991 – ஜெ. ஜெயலலிதா (நிதி)

➢ இவர் தமிழகத்தின் **இடைக்கால முதலமைச்சராக மூன்று முறை** பணியாற்றியுள்ளார்.

- 1969 – (அண்ணா மறைந்த பொழுது)
- 1984 – 1985 (எம்.ஜி. ராமச்சந்திரன் உடல்நிலை சரியில்லாத பொழுது)
- 1987 – (எம்.ஜி. ராமச்சந்திரன் மறைந்த பொழுது)

➢ இவர் 1977–இல் **'மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம்'** என்னும் கட்சியை தொடங்கினார். பின்னர் (1977) அஇஅதிமுகவில் இணைந்து அக்கட்சியின் அவைத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் போன்ற பதவிகளை வகித்தார்.

➢ 1982 ஜூலை 1 இல் தொடங்கப்பட்ட சத்துணவுத் திட்டத்தை கண்காணிக்க முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் உருவாக்கப்பட்ட உயர்மட்ட குழுவில் இவரும் ஒரு உறுப்பினராக இருந்தார்.

➢ செல்வி ஜெ. ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த பொழுது (1995) தஞ்சாவூரில் **எட்டாவது உலகத் தமிழ்மாநாடு** நடந்தது.

- **நெடுஞ்செழியன்** மற்றும் **எஸ்.டி. சோமசுந்தரம்** ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி வரவேற்புக் குழு, நிகழ்ச்சி அமைப்புக் குழு உள்ளிட்ட 15 குழுக்கள் உருவாக்கப்பட்டன.

➢ இவர் எழுதிய முக்கிய நூல்கள்:

- திருக்குறள் பொழிப்புரை
  - மதக் கருத்துகள் திருக்குறளில் இல்லை என்றும் திருக்குறள் சமய சார்பற்ற நூல் என்றும் திருக்குறளானது மனுதர்மத்திற்கு எதிரான நூல் என்றும் தனது நூலில் விளக்கியுள்ளார்.
- வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும் (தன் வரலாறு நூல்)
- மொழிப் போராட்டம்

SHANKAR IAS ACADEMY

- மதமும் மூட நம்பிக்கையும்
- எழுச்சி முரசு
- கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்
- அண்ணாவோடு வாழ்ந்த அந்த சிறைவாசம்
- பண்டையக் கிரேக்கம்.

➢ இவர் பணியாற்றிய இதழ்கள்:

- மாலைமணி (தலைமை உதவி ஆசிரியர்)
- மன்றம் (இதழ் நிறுவனர் – 1953)
- நம் நாடு (ஆசிரியர்)

➢ இவர் 2000 ஜனவரி 12 இல் இயற்கை எய்தினார்.

* * * * * * * *

SHANKAR IAS ACADEMY